மின்சக்தியைப் பயன்படுத்தி விவசாயிகளுக்கு 80 சதவீத மானியத்துடன் பம்ப் செட்டுகள் இப்போது வழங்கப்பட்டுவருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக இங்கே கொண்டுவந்து, அதை அமல்படுத்தி வருகின்றவர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். இந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேண்டுகோள் வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு இதை எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 303, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தமிழழகன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

303—

வீட்டுமனைப் பட்டா

***63418 திரு. க. தமிழழகன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திட்டக்குடி தொகுதி, பெண்ணாடம் பேரூராட்சி, டி. அகரம் கிராமத்திலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர் மாவட்டம், திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி, பெண்ணாடம் பேரூராட்சி, டி. அகரம் கிராமத்தைச் சார்ந்த ஆதி திராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட, புல எண் 70/7–ல் 3.56.0 ஹெக்டேர் நிலம் இத்துறையின்மூலம் கையகம் செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் வாழும் ஆதி திராவிட மக்களிடமிருந்து இலவச வீட்டுமனைப் பட்டா கோரி 156 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இம்மனுதாரர்களின் வருமான

2015 செப்டம்பர் 21]

வரம்பு உள்ளிட்ட பிற தகுதிகள் குறித்து ஆய்வு செய்து, தகுதியான பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டதும், மனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தமிழ்மகன் அவர்கள்.

முற்பகல் 10–20

திரு. க. தமிழ்மகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல் தோன்றி மண் தோன்றா காலத்து வாளோடு முன்தோன்றிய மூத்த குடி நம் தமிழ்க்குடி. இந்தத் தமிழ்க்குடி மக்களை ஆண்டு வந்த மன்னர்களும், அவர்களுக்குப் பின்னால் ஆள வந்த ஆங்கிலேயர்களும், அவர்களுக்குப் பின்னால் ஆள வந்த முதல்வர்களும் செய்யாத பல நல்ல திட்டங்களை, சட்டங்களாக சட்டமன்றத்தில் நிறைவேற்றி, அதை முழுமையாக முடித்துத் தந்த பெருமை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத்தான் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிரந்தர முதல்வர் அம்மா அவர்கள் சட்டமன்றத்தில் அடியெடுத்து வைத்த அந்த நாள் முதல், இந்த நாள் வரை இலட்சோப இலட்ச ரூபாய் மதிப்பில் திட்டங்களைத் தமிழ் மக்கள் வாழ்வு மேம்பட நிறைவேற்றியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மன்னர்களும், வெள்ளைக்காரர்களும், யாரும் செய்யாத ஒரு மகத்தான சாதனையான விலையில்லா அரிசியை மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்குத் தந்து வரலாற்றுச் சாதனையைப் படைத்து வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர் வரும் 2016 சட்டமன்றத் தேர்தலிலே மீண்டும் அம்மா அவர்களின் மடியில்தான் வெற்றியின் இதயக் கனி விழப்போகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கனி பறிக்கும் பணியில் அம்மாவின் அணியில் அணிலாய் நான்; இனி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்ப்பவர்கள் அனலில் மாட்டிய பஞ்சு போல் ஆவார்கள்;

புனலில் மாட்டிய உப்பு ஆவார்கள்; காற்றில் பறக்கும் தூசு ஆவார்கள்; ஆலங்கட்டி மழையில் மாட்டிய சானான் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தமிழழகன், துணைக் கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் துணைக் கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்பு இல்லை, அவரை துணைக் கேள்வி கேட்கச் சொல்லி இருக்கிறேன்.

திரு. க. தமிழழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், திட்டக்குடி தொகுதி, பெண்ணாடம் பேரூராட்சிக்குட்பட்ட, திருமலை அகரம், வார்டு எண் 15—லே ஆதி திராவிட மக்கள் மட்டுமே வசித்து வருகிறார்கள். அந்த ஆதி திராவிட மக்களுக்கு மனைப் பட்டா கொடுப்பதற்காக ஏற்கெனவே அரசால் 9 ஏக்கர் நிலம் விலை கொடுத்து வாங்கப்பட்டிருக்கிறது. மிக விரைவாக அந்தத் திருமலை அகரம் ஆதி திராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களைக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் அந்த டி. அகரம் கிராமத்திற்கு ஏற்கெனவே இத்துறையால் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ள இடத்தில், மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று, தகுந்த பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தமிழழகன் அவர்கள்.

2015 செப்டம்பர் 21]

திரு. க. தமிழழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனைப்பட்டா வழங்கப்படும் என்ற செய்தியைச் சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் என் தொகுதி மக்களின் சார்பாகவும், திருமலை அகரம் ஆதி திராவிட மக்களின் சார்பாகவும் என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வீ.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்வேளூர் தொகுதி, புதுச்சேரி ஊராட்சி, தெற்குத் தெருவில் 70 ஆதி திராவிட மக்கள் வசித்து வருகிறார்கள். இவர்களுக்குக் கடந்த 60 ஆண்டுகளாக குடிமனைப் பட்டா வழங்கப்படவில்லை. நாகப்பட்டினம் வட்டாட்சியர் அவர்களிடம் சென்று இதுசம்பந்தமாகக் கேட்டால், Revenue Court-ல்தான் இதற்கான கோப்பு இருக்கிறது என்றும், அவர்கள்தான் பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் சொல்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுசம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுத்து, அந்த மக்களுக்குக் குடிமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமன்ற உறுப்பினர் அவர்கள், நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தொகுதியில் வீட்டுமனைப் பட்டா வழங்கிடக் கோருகிறார். வீடற்ற ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் திட்டம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. வீடற்ற ஆதி திராவிட குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட வேண்டியிருப்பின், புறம்போக்கு நிலத்தில் வழங்க வழிவகை இருக்கின்றதா என்று பரிசீலிக்கப்பட்டு, மனைப்பட்டா வழங்கப்படுகின்றது. அவ்வாறு ஆட்சேபணையற்ற புறம்போக்கு

நிலங்கள் ஏதும் இல்லையெனில், தனியார் எவரேனும் நிலம் கொடுக்க முன்வரும்பட்சத்தில், நில எடுப்புச் சட்டம், 31/1978-ன்கீழ் நிலத்தைக் கையகப்படுத்தி, வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 304, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

304—

தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா

***36879–திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரியிலுள்ள சிப்காட்டில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நு. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின்மூலம், உலகமே வியந்து பாராட்டும் வகையில், ரூ.2 இலட்சத்து 42 ஆயிரத்து 160 கோடியில் (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு பன்னாட்டு மற்றும் உள்நாட்டு நிறுவனங்கள் தமிழகத்தில் தொழில் தொடங்க வழிவகை செய்த, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, எனது பதிலைச் சமர்ப்பிக்கிறேன்.*

முற்பகல் 10-25

(அ) மற்றும் (ஆ) தருமபுரியிலுள்ள சிப்காட்டில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கும் உத்தேசம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.